# உடன்பிறப்பே... 89

**நீரை.மகேந்திரன்**

திமு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த புலவர் ஆடலரசு அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

## புலவர் ஆடலரசு

## கழக மேடைகளே உயிர்மூச்சு!

ஓவியம் : ரவி பேலட்



‘1977-ஆம் ஆண்டு, கழக வரலாற்றில் கொள்கைப் பற்றாளர்களை அடையாளம் கண்ட ஆண்டு’ என்பார் முத்தமிழறிஞர் கலைஞர். நெருக்கடிக்குப் பின் சந்தித்த தேர்தலில், வேறொரு ஆட்சி அமைந்தாலும், கழகத்தினர் சோர்ந்துவிடாமல் இருக்க, அதற்கு முன்பிருந்த வேகத்தைவிட வேகமாக இயங்கினார் கலைஞர். அந்த வேகத்துக்கு ஈடுகொடுத்தவர்கள் கழகப் பேச்சாளர்கள்.

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் 7 அன்று சேலம் மாவட்டத்தில், ஒரே நாளில் 75 நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தார் மாவட்டக் கழகச் செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம். 75 நிகழ்ச்சிகளிலும் கலைஞர் இருந்தார். 75 நிகழ்ச்சிகளிலும் கழகச் சொற்பொழிவாளர்கள் இருந்தனர். ‘வழக்காடுமன்றம்’, ‘பட்டிமன்றம்’, ‘சொற்பொழிவு’ எனச் சுற்றிச் சுழன்ற கழக இலக்கிய அணியினரின் பங்களிப்பு, காலத்தால் மறக்க முடியாத சுவடுகள். அந்தக் காலச்சுவட்டில் மறக்க முடியாத மூத்த முன்னோடி புலவர். ஆடலரசு.

### போர் முழக்கத்துக்குக் கட்டியம்!

1977-இல் சென்னை துறைமுகம் தொகுதியில் வென்ற செல்வராஜ் அவர்களுக்குப் பாராட்டு விழா. வள்ளுவர் கோட்டம் போல மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில், வரலாற்றில் பொறிக்கத்தக்க மிக நெகிழ்ச்சியான, நெருப்புப் பிழம்பாக உரையாற்றுகிறார், கலைஞர். **‘கலைஞரின் போர் முழக்கம்’** எனப் போற்றப்பட்ட அந்த உரைக்குக் கட்டியம் கூறுவதுபோல, கொள்கை முழக்கம் செய்தவர் ஆடலரசு.

கழகக் கூட்டங்கள், கலைஞர் கலந்து கொள்ளும் கூட்டங்கள் என்றால், சிறப்புரை யாற்றும் நிகழ்ச்சிக்கு முன்னரோ அல்லது முதன்மை நிகழ்ச்சியாகவோ ‘வழக்காடுமன்றம்’, ‘பட்டிமன்றம்’, ‘கவியரங்கம்’ ஆகியவை நிச்சயம் இடம்பெறும். திராவிடக் கொள்கைகளை எளிய மக்களிடத்தில் கொண்டுசேர்த்த இந்த வடிவங்களில் ஆழங்கால்பட்டவர் ஆடலரசு. இவர் கலந்துகொண்ட கூட்டங்களில், கலைஞர் சிறப்புச் சொற்பொழிவு என்றால், ‘இங்கு எனக்கு முன் பேசிய ஆடலரசு முழங்கியதுபோல’ எனத் தவறாமல் குறிப்பிடு வதைக் கழகத்தினர் அறிவர்.

பள்ளி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே கழக மேடைகளில் ஏறியவர். ‘கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பும், கழகம் ஆட்சி அதிகாரத்தில் இல்லாதபோதும் எந்த நெருக்கடிகள் வந்தாலும், தனது கொள்கைப் பற்றை மட்டும் விட்டுக் கொடுக்காத செயல் மறவர்’ என்பார் கலைஞர்.

### பெரியாருடன் மேடைகள்

கடலூர் மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடி கிராமத்தில், 1933-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி பிறந்தவர். பெற்றோர் சிவசாமி-சாரதாம்பாள். ஆடலரசு அவர்களுக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் நடராசன் என்பதாகும். பின்னாட்களில் தமிழ்ப் பற்று, கழக ஈடுபாடு காரணமாக ‘ஆடலரசு’ எனத் தன் பெயரை மாற்றிக் கொண்டார்.

குறிஞ்சிப்பாடியில் உயர்நிலைக் கல்வி வரை பயின்றவர், தருமபுர ஆதீனம் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து, புலவர் பட்டத்திற்குப் படித்தார். அங்கு படிக்கும்போது, திராவிட இயக்கத் தலைவர்களின் தொடர்பும், அரசியலும் அவரைப் பற்றிக் கொள்ள, அப்போதே **‘தியாகம்’** எனும் தலைப்பில் நாடகம் எழுதி, நடித்து கழகக் கொள்கைகளைப் பரப்பத் தொடங்கினார்.

> **“தனது இறுதிக்காலத்தில், உடல் நலிவுற்ற நிலையில், மருத்துவ உதவிகளுடன் இயங்கிய நிலையிலும், ‘கழக மேடைகளே அவரது உயிராற்றலை நீட்டித்துக் கொடுத்தன” என்கின்றனர் அவருடன் பயணப்பட்டவர்கள்.**

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒருமுறை மயிலாடுதுறையில் மொழிப்போர்த் தியாகிகள் ‘தாளமுத்து நடராசன் நூலக’த்தின் சார்பில், பாவேந்தர் அவர்களை அழைத்து வந்து பொதுக்கூட்டம் நடத்தியுள்ளார். அதற்காக ஆதீனக் கல்லூரியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அதைப் பற்றிக் கவலைப்படாமல், மயிலம் தமிழ்க் கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பை முடித்துள்ளார்.

தமிழறிஞர் மயிலை சிவமுத்து அவர்களின் தலைமையில், இயங்கி வந்த மாணவர் மன்றத்தில் சில ஆண்டுகள் பணியாற்றினார். அதன்பின்னர், ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே கழக மேடைகளில் கொள்கை முழக்கம் செய்யத் தொடங்கினார்.

### கழகப் பயணங்கள்

தந்தை பெரியார் தலைமையில், நடைபெற்ற திருமணங்கள் சிலவற்றில் பங்கேற்று, வாழ்த்தி உரையாற்றும் வாய்ப்பினைப் பெற்றவர். அதுபோல, பேரறிஞர் அண்ணா அவர்களின் பொதுக் கூட்டங்களிலும் ஆடலரசு அவர்கள் தனது சொற்பொழிவுகளால் அரங்கத்தைத் தன்வசப்படுத்தியவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் கழக இலக்கிய அணியை உருவாக்கியபோது, அதில் முழுமுற்றாக இயங்கியவர், ஆடலரசு. கிராமப்புறங்களில் கழகக்கூட்டங்கள் என்றால், அதில் அனைத்து மக்களும் ஏற்கும் வகையில், ஆடலரசு ஆற்றலோடு உரையாற்றுவதை கழக நிர்வாகிகள் அறிவர்.

கொள்கைப் பிரச்சார வடிவங்களில் ‘பட்டிமன்றம்’, ‘கவியரங்கம்’, ‘வழக்காடு மன்றம்’ என பல்வேறு வகைகளில், பல கோணங்களில் கொள்கை விளக்கம் செய்யும் புலவர் ஆடலரசுவின் உரையைத் தலைவர்களே ரசித்துக் கேட்பது வழக்கம். குறிப்பாக, கலைஞர் ரசித்துக் கேட்ட நிகழ்வுகள் ஏராளம். கழகத்தினருக்கு நமது **‘இடிமுழக்கம்’** வெற்றிகொண்டான் அவர்களின் பேச்சும், உரையும், நகைச்சுவையும் பிடிக்கும் என்றால், வெற்றிகொண்டான் அவர்களே, ஆடலரசு அவர்களின் பேச்சுக்கு மயங்குபவர்.

“புலவர் பொன்னிவளவன், தஞ்சை கூத்தரசன், புலவர் ஆடலரசு உள்ளிட்ட இலக்கிய அணி முன்னோடிகள், தமிழ்நாட்டில் செல்லாத கிராமங்களோ, ஒன்றியங்களோ இல்லை. ஒவ்வொரு ஊரிலும் அவர்களின் கொள்கைத் தடங்கள் பதிக்காத நாளே இல்லை எனும் அளவுக்குக் கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர். கழகக் கூட்டம் நடக்கும் ஒரு ஊருக்கு வாகன வசதி இல்லாமல், குதிரை வண்டியில் சென் றுள்ளார். வண்டி குடைசாய்ந்து, குதிரை தனியாக ஓடியதில், வண்டியோட்டி குதிரை யைப் பிடிக்கச் சென்றுவிட்டார். இவர், காத்திருக்காமல் நான்கு கிலோமீட்டர் நடந்து சென்ற நிகழ்வுகள் எல்லாம் நடந்துள்ளன” என்கின்றனர் ஆடலரசு அவர்களால் மேடைகளில் வளர்க்கப்பட்டவர்கள்.

### தாய்மொழி தமிழ்!

நாடக வடிவங்களிலும் கொள்கை பேசுவதைத் தொடர்ந்த ஆடலரசு அவர்கள், தேர்தல் களத்தின்போது **‘பொழுது விடியும்’** என்கிற கொள்கை விளக்க நாடகத்தை நடத்தி, கழக வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டியிருக்கிறார். கழக முன்னோடி, தொழிற்சங்கவாதி குலோத்துங்கன் அவர்களின் **‘கண்ணியம்’** மாத இதழின் ஆசிரியராக இருந்த ஆடலரசு, **‘புதிய பூமி’** இதழின் ஆசிரியர் குழுவிலும் பங்களிப்பைச் செய்தவர்.

தன்னலம் கருதாத உழைப்புக்காக, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வழி பயணப்பட்ட ஆடலரசு அவர்களின் உழைப்புக்காக, முத்தமிழறிஞர் கலைஞர் தனது கரங்களால் 1997-ஆம் ஆண்டில் கழக முப்பெரும் விழாவில் **‘கலைஞர் விருது’** அளித்து சிறப்பு செய்தார்.

தனது இறுதிக்காலத்தில், உடல் நலிவுற்ற நிலையில், மருத்துவ உதவிகளுடன் இயங்கிய நிலையிலும், ‘கழக மேடைகளே அவரது உயிராற்றலை நீட்டித்துக் கொடுத்தன’ என்கின்றனர், அவருடன் பயணப்பட்டவர்கள். 2007-ஆம் ஆண்டு மே 14-ஆம் தேதி வாக்கில் வேலூர் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிவிட்டு, சென்னை வந்தார். அதற்கு அடுத்த நாள், மே 15 அன்று தனது இயக்கத்தை நிறுத்திக் கொண்டார். இன்று அவர் இல்லாமல் இருந்தாலும், அவர் எழுப்பிய கொள்கை முழக்கம் என்றும் உயிர்த்திருக்கும்.

**...துடிக்கும்**

---

## கழக வரலாற்றைச் சொல்லும் நாட்காட்டி!



நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்திற்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. இந்த வரலாற்றில், ஒவ்வொரு நாளும் ஏதேனும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு நடந்திருக்கிறது. அந்த அரிய நிகழ்வுகளையெல்லாம் தொகுத்து, நாட்காட்டியைப் பார்த்து வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கான அருமையான வாய்ப்பை உருவாக்கியிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி.

கண்ணைக் கவரும் வண்ணப் படங்களோடும், கருத்துச் செறிவோடும் உருவாகியிருக்கிற, 2025-ஆம் ஆண்டுக்கான திராவிட முன்னேற்றக் கழக நாட்காட்டியை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ளார். நீதிக்கட்சி தொடங்கி, இன்றைய திராவிட முன்னேற்றக் கழகம் வரை எந்தெந்த நாளில் என்னென்ன நிகழ்வுகள் நடைபெற்றன என்ற செய்திகள், இந்த நாட்காட்டியில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு மாதத்திலும் திராவிட மாடல் அரசின் மூன்றரை ஆண்டு சாதனைகளும், திட்டங்களும் இடம்பெற்றுள்ளன.

இவை மட்டுமின்றி, கழகத்தின் செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக, தகவல் தொழில்நுட்ப அணி சேனலில் இணைவதற்கான, ‘க்யூ.ஆர். கோடு’ம் ஒவ்வொரு மாதப் பக்கத்திலும் இடம்பெற்றுள்ளது. நாட்காட்டியை யார் வேண்டுமானாலும் இலவசமாகத் தரவிறக்கம் செய்துகொள்ளலாம். இதற்காக https://www.itw2025.com/ என்ற இணையதளப் பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுக்கூட்டங்கள், மாநாடுகள் மட்டுமல்ல, நாட்காட்டிகள் கூட கழக வரலாற்றைச் சொல்லும்!

---

## ஃப்ளாஷ்பேக்



### மறக்க முடியாத ஒரு பொக்கிஷம்!



ரபீக்

1989-ஆம் ஆண்டு தேர்தல் முடிந்த பிறகு, திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்புப் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் தற்போதைய கழகத் தலைவரும் தமிழக முதலமைச்சருமான தளபதி அவர்கள் கலந்துகொண்டார்.அப்போது அவரை நானும் எனது நண்பன் பொன்னு என்பவரும் சென்று சால்வை அணிவித்து, வாழ்த்துப் பெற்றோம். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு பொக்கிஷமாக, இதனைப் பாதுகாத்து வருகின்றேன்.

**– ரபீக், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர், செங்கோட்டை, திருநெல்வேலி (மா).**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## கருவூலம்

### ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளர்!


1952-ஆம் ஆண்டு, சென்னை மாநகரம் ஒரே நாடாளுமன்ற தொகுதியாக இருந்தது. 1957-ஆம் ஆண்டு வடசென்னை, தென் சென்னை இரு நாடாளுமன்றத் தொகுதிகள் ஆக்கப்பட்டன. 1957-ஆம் ஆண்டில் தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டவர் ‘சண்டே அப்சர்வர்’ பி.பாலசுப்ரமணியம். அவரது தேர்தல் பிரச்சாரத்தில் தி.மு.க. ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர் என சுவரொட்டி அச்சிடப்பட்டிருந்தது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

696

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131